செ.வெ.எண்:19/2017 நாள்:12.06.2017

## சிவகங்கை மாவட்டம்

## மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொது மக்களிடமிருந்து நேரடியாக மனுக்களைப் பெற்று, மனுக்கள் மீது தீர்வுகாணும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கினார்.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வேலைவாய்ப்பு, இலவச வீட்டுமனைப் பட்டா, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு வரப்பெற்ற மனுக்கள், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை கோருதல், வங்கிக் கடன், மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் உபகரணங்கள் கேட்டல், குடும்ப அட்டை கோருதல், இலவச தையல் இயந்திரம் வழங்கக் கேட்டல், ஆக்கிரமிப்பு அகற்ற கேட்டல், பட்டா ரத்து தொடர்பான மனு, மின் இணைப்பு வழங்கக் கோருதல், அடிப்படை வசதிகள் கோரி வரப்பெற்ற மனுக்கள், நில இழப்பீட்டு நிவாரணம் வழங்கக் கோருதல் மற்றும் இதர மனுக்கள் போன்ற 248 கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றன. முதலமைச்சர் தனிப்பிரிவிலிருந்து பெறப்படும் மனுக்கள் மற்றும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மீது விரைவில் தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் வீடு தீ பிடித்து எரிந்து வீட்டில் உள்ள அனைத்துப் பொருட்கள் மற்றும் தொழில் செய்து வந்த தேய்ப்பு பெட்டி எரிந்தததைக் கருத்தில் கொண்டு, மேலமங்களத்தை சேர்ந்த திரு.ம.அருள்ராஜ் அவர்களுக்கு ஒரு தேய்ப்பு பெட்டியினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி, மாவட்ட தொழிலாளர் நலத்துறை அலுவலர் திருமதி.மைவிழிச்செல்வி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.பிரகாஷ் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு:: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.